
உ

சிவ சிவ

# அன்புநெறி

மலர்-13 மார்ச் 2009 இதழ்-08

$1.00





தூய்மையே மணிமார்பு; தொன்மறையின்
பிழிசாறாய்த் துலங்கு கின்ற
வாய்மையே மணிவாக்கு; மங்கலஞ்செய்
மனைவாழ்வே கண்கள் வீர
நேயமுறு பொதுநலமே திருமேனி;
நிறையின்ப முறுவல் பூத்துத்
தாயமுதம் விளங்குகின்றாள்–**அறத்தேவி**
**திருக்குறளாய்**–தாள்பெற் றுய்வாம்!

– சுத்தானந்த பாரதி

# DR. ILLANGO & ASSOCIATES

DENTAL OFFICE (OPEN 7 DAYS A WEEK)




**உங்கள் சேவை கருதி இரு இடங்களில் வாரத்தின் ஏழு நாட்களும் பல் வைத்திய நிபுணர்களின் சேவைகள்.**

## Dr. M. Illango

B. D. S, D orth (Oslo)
General Practioner Mainly Orthodontics

## Dr. S. Raveendran

B.D. S., M.S, F. D. S. R. C. S. (Eng.)
General Practioner

## Dr. Janaki Illango

B. D. S. Family Dentistry

**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. E., # 303
Scarborough, ON
**(416) 292 -7004**

**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**



**அன்புநெறி சந்தா விபரம்**

தனிப்பிரதி **$1.00,** வருடச் சந்தா (12 இதழ்கள்) **$10.00.**
(நேரில் பெறுவோருக்கு)

**அஞ்சல் பொதிச் செலவுடன் வருடச் சந்தா:-**

| | |
|---|---|
| **கனடா:** | Can. $ 25.00 |
| **அமெரிக்கா:** | Can. $ 30.00 |
| **ஏனைய நாடுகள்:** | Can. $ 40.00 |

**தொடர்புகட்கு: சைவசித்தாந்த மன்றம், கனடா**
Saiva Sidhdhantha Manram, Canada
1008-50 Elm Dr. E. , Mississauga, ON, L5A 3X2 Canada
(Tel.: 905-566-4822)

உ

சிவ சிவ

# அன்புநெறி


| மலர் – 13 | சர்வதாரி, மாசி – பங்குனி, மார்ச் 2009<br>திருவள்ளுவர் ஆண்டு - 2040 | இதழ் - 8 |
|---|---|---|


**பொருளடக்கம்** **பக்கம்**


1. திருக்குறள் . . . . 4
2. திருவள்ளுவர் வரலாறும் திருக்குறளும் 9
3. திருவள்ளுவரின் திருக்குறள்–பாடல் . 15
4. மன்றத்தில் நிகழ்ந்தவை. . . 16
5. இறைவன் இதயவாசி .. . . 17
6. சித்தாந்த நூல்களில் திருக்குறள் சிந்தனைகள் 21

**சிறுவர் பகுதி**

7. ஆறுமுகநாவலர் சைவ வினாவிடை –2 - 27
8. சைவபோதம் . . . . 29



**ஆசிரியர் :** திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம்
**நிர்வாக ஆசிரியர்:** திரு. தி. விசுவலிங்கம்
**உதவி ஆசிரியர்:** திருமதி அநிதா திருமுருகா
**வெளியீடு:** சைவசித்தாந்த மன்றம், கனடா


**கச்சியப்பர்**

**குருபூசை நாள்:** மாசி மிருசீரிடம்

**கந்தபுராணம்**

துய்யதோர் மறைகளாலுந் துதித்திடற்கரிய செவ்வேள்
செய்ய பேரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்புகீண்ட வேற்படைவாழ்க அன்னான்
பொய்யில் சீரடியார் வாழ்க வாழ்க இப்புவன மெல்லாம்

**சைவ சித்தாந்த மன்றம், கனடா**
Saiva Sidhdhantha Manram, Canada 1008-50 Elm Dr. E.,
Mississauga, ON L5A 3X2 Canada Fax/Tel (905) 566-4822
Email:- saivamanram@gmail.com

# திருக்குறள்

திருவள்ளுவர், கடவுள், உயிர் உலகம் என்னும் முப்பொருள் இலக்கணங்களையும் முற்றக்கற்று முழுதுணர்ந்த முனிவராதலின், பண்டைத் தண்டமிழ் மொழி வழக்கிற்கேற்பத் திருக்குறள் என்னும் ஒப்புயர்வற்ற நூலை, அறம் பொருள் இன்பமென வகுத்து, இயற்றி உலகுய்ய அருளினார்.

சொற்களால் சுருங்கி பொருளால் விரிந்து, ஈரடியில் இவ்வுலகை அளந்து காட்டுவதனாலும், மொழி, இனம், மதம், காலம், ஆகியவற்றைக் கடந்து நிற்பதாலும் திருக்குறள் உலகப் பொதுமறை எனப் போற்றப்படுகின்றது. தமிழ் இலக்கியப் பகுப்பில் திருக்குறள் பதினெண்கீழ்க் கணக்குத் தொகுப்புள் அடக்கப் பெற்றுள்ளது.

''நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய ஆங்கீழ்க் கணக்கு.''

என்னும் செய்யுளால் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை அறியலாம். இவ்வெண்பாவில் திருக்குறள் முப்பால் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

மனித வாழ்வில் அடைய வேண்டிய உறுதிப் பொருள்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும். திருக்குறளில் அறம், பொருள், இன்பம் என்கின்ற மூன்று உறுதிப் பொருள்கள் விளக்கப் பட்டுள்ளமையால் முப்பால் என்னும் பெயரைப் பெற்றது.

திருக்குறளை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்று கையில், சங்கப் பலகை ஏனைய நூல்களைப் புறத்தே தள்ளிவிட்டு இஃதொன்றையே ஏற்றுத் திகழ்ந்ததாம். ஆகவே இது தனக்கொப்பாய நூல் வேறொன்றின்றித் தனிவளம் பொருந்திய பெருநூல் என்பது வெள்ளிடை மலைபோற் தெள்ளியதாகும். மேலும் பண்டுதொட்டு இதுகாறும் உலகவழக்கில் நின்று நிலவும் அமிழ்தினும் இனிய

செந்தமிழ் மொழியின் முதற்கண் ஆக்கப் பெற்றுத் தமிழர்தம் உறுதி பயக்கும் பெருமறையாய்ப் போற்றப் பெறுகின்றது. திருக்குறள் ஓதுவதற்கு எளிது; மனப்பாடஞ் செய்வதும் சுலபம்; ஒருமுறை படித்தாலே போதும் உணர்தற்கு அரிது; வேதங்களிலுள்ள விழுப்பொருள்களை எல்லாம் விளக்கமாக உரைப்பது; நினைக்குந்தோறும் நெஞ்சில் தெவிட்டாத இன்பத்தை ஊற்றெடுக்கச் செய்வது. இதன் பெருமையை நன்குணர்ந்த மாங்குடி மருதனார்,

> ''ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
> வேதப் பொருளாய் மிகவிளங்கித்–தீதற்றோர்
> உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளம் உருக்குமே
> வள்ளுவர் வாய்மொழி மாண்பு.''

என்றனர்.

திருக்குறள், எச்சமயத்தினருக்கும் எக்காலத்திற்கும் எந்நாட்டினர்க்கும் பொதுவாய், எல்லாச் சமயத்தினர்க்கும் பொதுவாகிய சொற்றொடர்களினாலே கடவுளைச் சுட்டினும், நுணுகி ஆராய்வார்க்கு அது சைவசமயப் பொதுத்தன்மையை விளக்குவதாய் அமைந்துள்ளது.

திருக்குறளுக்குப் பின்னெழுந்த நூல்களெல்லாம், இதன் மொழிப் பொருளைப் பொன்போற் போற்றும் பெருமை வாய்ந்தனவாயின. உதாரணமாக: வள்ளுவர் அழுக்காறாமை என்ற அதிகாரத்தில்,

> ''கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
> உண்பதூஉம் இன்றிக் கெடும்.''

என்றார். ஒருவன் ஒரு பொருளைப் பிறருக்குத் தருமமாகக் கொடுக்கும் பொழுது எவன் பொறாமைப் படுகிறானோ, அவன் அழிவதுமின்றி, அவனுடைய சுற்றத்தாரும் உண்ண உணவும், உடுக்க உடையுமின்றித் துன்புறுவர் என்பது மேற்கூறிய திருக்குறளின் பொருள்.

இத் திருக்குறளை கம்பர் தனது இராமாயணத்திலே இராமனுக்கு விஸ்வாமித்திரர் வாமனாவதாரத்தைப் பற்றிக் கூறும்போது எடுத்து இன்பம் பயக்குமாறு கூறுகின்றார். அப்பாடல்,

"எடுத்தொருவருக் கொருவ ரீவதனின் முன்னே
தடுப்பது நினக்கழகிதோ தகைவில் வெள்ளி
கொடுப்பது விலக்குகொடி யோயுனது சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றிவிடு கின்றாய்."

கவியரசராகிய கம்பர் இப்படிப் பல இடங்களிலும் திருக்குறளைப் பொன்போல் எடுத்து அமைத்து, தமது இராமாயணத்தை அலங்கரிக்கின்றார் என்றால், திருக்குறளின் பெருமையை அளவிட வல்லார் யாவர்?

இத் திருக்குறளைத் தொட்டாலும் கை மணக்கும்; படித்தால் கண் மணக்கும்; கேட்டால் செவி மணக்கும்; சொன்னால் வாய் மணக்கும்; எண்ணினால் இதயம் மணக்கும். அத்தகைய தெய்வ மணம் வீசும் சீரும் சிறப்பும் உடையது திருக்குறள்.

"சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து–முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா."

என்றார் கவுணியனார் என்ற சங்கப்புலவர். நவில்தொறும் நவில்தொறும் நறுஞ்சுவை பயப்பதாய், பயில்தொறும் பயில்தொறும் பழமையுடன் புதுமை காட்டுவதாய், புறவிருள் நீக்கும் உலக ஞாயிறே போன்று மக்கள் அகவிருள் நீக்கும் அரிய பெற்றித்தாய் விளங்குவது இந்நூல்.

திருக்குறளைப் பற்பல மொழிகளில் மொழி பெயர்த்து வேற்று மொழியினரும் பாராட்டிப் புகழ்வதே அதன் பெருமையையும் அருமையையும் நன்கு புலப்படுத்துகின்றது. வள்ளுவர் ஒருவருக்கே "தெய்வப் புலவர்" என்று பெயர். அவர் சங்கப்புலவர் நாற்பத்தொன்பது பெருமக்களாலும் நன்கு மதிக்கப் பெற்றவர். தூய வாழ்வில் வாழ்ந்தவர். எல்லா அறமும் உணர்ந்தவர். இவரது புலமைச் சிறப்பின் காரணமாக இவரை முதற்பாவலர், நாயனார், தேவர், தெய்வப்புலவர், செந்நாப்போதார், மாதானுபங்கி, பொய்யில்புலவர், பெருநாவலர், நான்முகனார் முதலிய சிறப்புப் பெயர்களிட்டும் வழங்குகின்றனர். இவர் கி. மு. 31 இல் பிறந்தார் என்று உறுதி செய்யப்பட்டுத் "திருவள்ளுவர் ஆண்டு" கணிக்கப்பட்டுள்ளது

“யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணமே பிறந்ததில்லை! உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை” என்று பாரதியாரும், “வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகம்” என்று பாரதிதாசனும் பாடியுள்ளமை திருவள்ளுவரின் புகழையும் நிலையான பெருமையையும் உணர்த்தப் போதுமான சான்றுகளாகும்.

இத்தகைய பெரும்புலவர் திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய இத் திருக்குறளும் பொன்றாப் புகழுடையது; என்றும் இளமையானது; முப்பாலால் நாற் பொருளையும் நனி விளக்குவது. திருக்குறளுக்கு முப்பானூல், உத்தரவேதம், தெய்வநூல், திருவள்ளுவர், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை என்னும் பெயர்களும் உண்டு.

தமிழ் எழுத்துக்கள் அகரத்தில் தொடங்கி னகர மெய்யில் முடிவடைகின்றன. எல்லா எழுத்துக்களும் இதற்குள் அடங்கி விடுகின்றன. திருக்குறளும்,

“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.”

என்று அகரத்தில் தொடங்குகின்றது.

“ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்”

என்று னகர மெய்யில் முடிவடைகிறது. இவ்வாறு வேறு எந்த நூலும் அமையவில்லை. இத்தகைய பல சிறப்புக்களை உடையது திருக்குறள்.

திருக்குறள் நூலானது முதலடி நான்கு சீர்களாலும், ஈற்றடி மூன்று சீர்களாலும் அமைந்த சிறிய குறள் வெண்பாவில் ஆக்கப் பெற்றுள்ளது. திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்று முப்பாலாக அமைந்துள்ளது. இதில் முதலாவதாகிய அறத்துப்பால் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல் (விரதம், ஞானம்), ஊழியல் என்னும் நான்கு இயல்களை உடையது. அவற்றுள் பாயிரவியல் 4 அதிகாரங்களையும், இல்லறவியல் 20 அதிகாரங்களையும் உடையது. துறவறவியல் – விரதம் 9 அதிகாரங்களையும், ஞானம் 4 அதிகாரங்களையும் கொண்ட இரு சிறு உட்பிரிவுகளை

உடையது. ஊழியல் ஒரு அதிகாரத்தை உடையது.

இரண்டாவதாகிய பொருட்பால் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்னும் மூன்று பிரிவுகளை உடையது. அவற்றுள், அரசியல் 25 அதிகாரங்களையும், அங்கவியல் 32 அதிகாரங்களையும், ஒழிபியல் 13 அதிகாரங்களையும் உடையன.

மூன்றாவதாகிய இன்பத்துப்பால் களவியல், கற்பியல் என்னும் இரண்டு பிரிவினைகளை உடையது. அவற்றுள் களவியல் 7 அதிகாரங்களையும், கற்பியல் 18 அதிகாரங்களையும் உடையன.

ஆகவே பால் 3, இயல் 9, அதிகாரம் 133, பாக்கள் 1330. இவைகளை ஒருவன் நன்றாகப் படித்து விட்டால் மீண்டும் ஒன்றையும் படிக்க வேண்டிய அவசியமில்லை. உலகம் போற்றும் உயர் நிலையில் விளங்கலாம்.

"ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின் – போயொருத்தர்
வாய்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க் கேட்க வீற்றிருக்க லாம்."

என்கிறார் நத்தத்தனார் என்னும் புலவர். சான்றோர்கள் பலர் பாடியதாகத் தொகுக்கப்பட்டுள்ள "திருவள்ளுவ மாலை" திருக்குறளின் பெருமையை உணர்த்துகின்றது.

திருவள்ளுவரையும் திருக்குறளைப் பற்றியும் போற்றுதலோடு அமையாது, இச் சிறந்த நூலைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் ஓதி உணர்ந்து வாழ்வாங்கு வாழவேண்டும்.

**ஆசிரியர் தி. வி.**

**தண்டி யடிகள் நாயனார்**
**திருத்தொண்டர் புராணசாரம்**

திருவாரூர் வருந்தண்டி யடிகள் காட்சி சேராதார்
குளந்தொட்டற் கமணர் சீறிக்
குருடாநீ முன்செவிடுங் கூடிற் றென்று குறித்தறியைப்
பறித்தெறியக் கொதித்துத் தங்கண்
அருளாலே விழித்தெவரு மந்த ராக வமணர்கலக்
கம்பலகண் டவர்கள் பாழிப்
பருவான கற்பறித்தா விக்கரையுங் கட்டிப் பரனருளால்
அமருலகம் பற்றி னாரே. – உமாபதிசிவம்

# திருவள்ளுவர் வரலாறும் திருக்குறளும்

(சுவாமி வேதாசலம் என்னும் மறைத்திரு. மறைமலை அடிகள் அவர்கள் 1935 இல் திருவள்ளுவர் திருநாட்கழகத்தின் திருநாள் விழாவில் ஆற்றிய தலைமையுரை)



''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''.

''மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.''

திருவள்ளுவர் திருநாட் கழகத்தின் இத்திருநாட் கொண்டாட்டத்திற்கு என்னைத் தலைவராக இருக்குமாறு கேட்டுக்கொண்ட அமைச்சர் கண்ணப்ப முதலியார், கண்ணுசாமிப் பிள்ளை, தலைவர் நமச்சிவாய முதலியார் முதலிய அன்பர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

திருவள்ளுவரைப் பற்றிச் சொற்பொழிவொன்று நிகழ்த்த வேண்டுமென்று இக்கழக அன்பர்களால் கட்டளை இடப்பட்டது. ஆதலால், என் அறிவிற்கும் ஆற்றலுக்கும் எட்டிய அளவிற்குச் சிறிது நேரம் சொல்ல நினைக்கின்றேன்.

திருவள்ளுவ நாயனார் இயற்றிய திருக்குறள் நூலைப்பற்றி அவர் காலத்தில் இருந்தவர்களும், அவரைப் போன்ற தமிழறிவு வாய்த்திருந்தவர்களும் ஆகிய தமிழ்ப் புலவர்களே பலபடப் பாராட்டிக் கூறியுள்ளார்கள். ''எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்,'' என்று அவர்களில் ஒருவர் கூறியாங்கு, மக்களாகிய நாம் எல்லோரும் அறிய வேண்டுவன எல்லாம் இத்திருக்குறள் நூலின் கண் உள. ஆகவே, அத்தகைய பெருமை வாய்ந்த ஒரு நூலைப் பற்றிச் சிறிது நேரத்தில் ஒரு சிறிது எடுத்துப் பேசுவது அருமையிலும் அருமையாகும்.

கடல் நீரை அளக்கக் கருவியும் உண்டோ? ''ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடலில் நாழி முகவாது நானாழி'' ஆகவே, கடல் நீரை அளந்தெடுத்து அறுதியிட்டுக் கூறுதற்குரிய கருவி ஒன்றை யாம் இதுகாறும் கண்டிலம். அது போலவே, குறளாகிய கடலிலுள்ள அரும்பொருளாகிய நீரை அளந்தறியும் கருவியும்

ஒன்றுண்டு கொல்! ஆகவே குறளாகிய அப்பேராழியில் என் சிற்றறிவாகிய சிறு நாழி கொண்டு எத்துணை முகத்தற் கூடுமோ, அத்துணை அளவு முகந்தெடுத்துக் கூற முயல்வேன்.

இம்முயற்சிக்கு உறுதுணையாகத் திருவள்ளுவர் காலத்திருந்த ஓராசிரியர் பாடிய பாட்டொன்றையே முதற்கண் துணைக்கொள்வேன்.

"ஒன்றே பொருளெனின் வேறேன்ப வேறெனின்
அன்றென்ப வாறு சமயத்தார் — நன்றென
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி." – கல்லாடர்

என்பது அப்பாட்டு.

திருவள்ளுவர் காலமோ, இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேற்பட்டதாகும். அக்காலத்திலிருந்த பல திறப்பட்ட மதக் கொள்கைகள் ஆறு சமயங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இவ்வறு சமயத்தோரும் தத்தம் சமயமே பெரிதென்றும், தத்தஞ் சமயக் கொள்கைகளே தலை சிறந்தனவென்றும் வழக்கிட்டதோடன்றிப் பிற சமயங்களை மனம் போனவாறு இழித்துங் கூறி வந்தார்கள். இவ்வாறாக மாறுபட்ட இவ்வறு சமயத்தோரும் தழுவிக்கொள்ளத் தக்க வகையில் வள்ளுவனார் முப்பாலை மொழிந்திட்டார். அன்றியும், பல வகைப்பட்ட சாதியாரும், நாட்டினரும், காலத்தினரும், பிறரும் ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் அந்நூல் செய்யப்பட்டு இருந்தமையினாலேயே அதனை "எப்பாலவரும்" தழுவிக் கொள்வாராயினர்.

முப்பால் என்பது அறம், பொருள், இன்பம் என்ற மூன்றுமேயாம். இந்த முறையிலேயே திருக்குறள் நூல் யாக்கப்பட்டதாகும். இது பற்றியும் அந்நூல் யாவராலும் மாறுபாடின்றித் தழுவப்பட்டு வருவதாயிற்று. ஒரு நூலை இயற்றுங்கால் அந்நூல் எல்லோருக்கும் உறுதியளிக்கத் தக்கவகையிலும். பயன்றரத் தக்க வகையிலும், எல்லோரையும் புனிதப்படுத்தத் தக்கவகையிலும் அதனை இயற்றி முடித்தல் என்பது எல்லார்க்கும் வாய்ப்ப தொன்றன்று. அஃதவ்வாறாக,

"அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின்
றிறனறிந்தேம் வீடு தெளிந்தே – மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு."

என்று வள்ளுவர் காலத்துப் புலவரொருவர் வியந்து பாடுமாறு நூலியற்றினார் வள்ளுவனார் எனின், அவர் பெருமை இனைத்தென்று சொல்லவும் போமோ?

> "அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
> றிறந்தெரிந்து செப்பிய தேவை — மறந்தேயும்
> வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற்
> கொள்ளா ரறிவுடை யார்."

என்றார் மற்றொரு மாப்புலவர் மாமூலனார். "தேவை" என்றது தெய்வத்தை என்று பொருள்படும். உண்மைத் தெய்வங்களை அன்றி மக்களை எளிதிற் பாடிப் புகழாத் தன்மை வாய்ந்த ஒரு பெரியார் வள்ளுவனாரைத் "தேவை" எனப் புகழ்ந்தனர். ஆம் அக்கால இயற்கைக்கு மாறாகப் புகழ்ந்தனர். எத்துணைக் கற்று எத்தனை எழுதினும், மகனாய்ப் பிறந்த ஒருவனைத் தெய்வம் என்று புகழ்ந்து கொண்டாடுதல் அன்றும் இன்றும் ஆங்கிலேயரிடம் காணப்பெறாமை நோக்கத் தக்கதாகும். நிற்க, இப்பாட்டே துணையாக வள்ளுவனாரை வள்ளுவச் சாதியிற் பிறந்தவராகக் கொண்டு கூறுவோர் கூற்று, அறிவில் கூற்றேயாகும்.

முப்பாலின் பயன் வீடென்பது ஒப்ப முடிந்ததோர் உண்மையாகும். 'வீடு' என்பதையும் முப்பாலுடன் சேர்த்து நாற்பால் என மொழிதலும் உண்டு. அத்தகைய விழுப்பயனாகிய வீட்டை உய்த்தறியுமாறு உள்ளடக்கி வைத்து, "முப்பாலில் நாற்பால்" மொழிந்த பெருமை திருவள்ளுவர்க்கே உரித்து.

இனி, வள்ளுவனார் இற்றைக்குக் குறைந்தது *1900* ஆண்டுகட்கு முன் பிறந்தவர் என்பது பற்றி யான் விரிவான ஆராய்ச்சி செய்து, "திருக்குறளாராய்ச்சி" என்று முன்னர் எழுதிய ஒரு முற்பகுதியிலும், "மாணிக்க வாசகர் காலமும் வரலாறும்" என்ற நூலிலும் எழுதியுள்ளேன். அவற்றிற் குறித்துள்ள சான்றுகளை எல்லாம் ஈண்டெடுத்துக் கூறி விளக்கக் காலம் போதாது. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகிய மணிமேகலை, சிலப்பதிகார ஆசிரியராகிய இளங்கோவடிகள் காலத்திலேயே எழுதப்பட்ட நூலாகும் என்பது சிலப்பதிகாரத்தின் இறுதியில் ஆசிரியர் "மணிமேகலைமே லுரைப்பொருள் முற்றிய சிலப்பதிகாரம் முற்றும்" என்பதனால் அறியப்படும். மணிமேகலைமே லுரைப்பொருள் முற்றிய நூலொன்றை இயற்ற எண்ணங் கொண்டவராய் ஆசிரியர் கோவலன் கதையைக்

கூறி "அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற்றாவதூஉ, முறைசால் பத்தினிக்கு உயர்ந்தோரேத்தலு, மூழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதுவுஉஞ், சூழ்வினைச் சிலம்பு காரணமாகச், சிலப்பதிகார மென்னும் பெயரா, னாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுளென, முடிகெழு வேந்தர் மூவர்க்குமுரிய தடிகணீரே யருளுக" என உரைசால் அடிகள் அருள மதுரைக் கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்," என்பது உற்று நோக்கற் பாலது. சாத்தனார் பாண்டியன் அவைக்களப் புலவர்; அவர் "சிலப்பதிகாரம்" இயற்றப் புகுவாராயின் பாண்டியனைக் குறைத்துப் பேச நேரும் ஆதலால் அதற்கு உளம் இசையாராய், இளங்கோவடிகளைப் பாடச் சொன்னார் என்பதும், துறவிக்கு வேந்தன் துரும்பாதலின், துறவியாகிய அடிகட்கு அ:. தும் எளிதாம் என்பதும் உய்த்துணரற் பாலனவாம். "வேந்தர் மூவர்க்கும் உரிய தடிகணீரே யருளு கென்றாற்கு" என்பதற்கு உரை கூறவந்த உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் "தான்பாடக் கருதி வினாவின சாத்தற்கு அங்ஙனங் கூறாது இங்ஙனம் கூறினாரென்க. என் சொல்லிய வாறோவெனின் இச்செய்கின்ற காப்பியம் மூவேந்தர்க்குமுரிய தென்பதனால் ஏனையோரை இவர் புகழ்ந்து உரையாராகலின், யாம் காப்பியஞ் செய்யக் கடவேம் என்பது கருதி, நீரே அருளுகென ஏகார வினாப்பொருண்மை தோன்ற இது கருதி இது சொன்னாற்கு அவர் கருதிய பொருளிற்கு உடம்படாது சொல்லிற்கு உடம்பட்டா ரென்பதாயிற்று" என உரை எழுதிப் போந்தமையுங் குறிப்பிடற்பாற்று.

இளங்கோவடிகள் சேர நாட்டில் வஞ்சி நகரத்திலிருந்து அரசு புரிந்த சேரலாதன் என்னும் அரசனுடைய இளைய மகனார்; சேரன் செங்குட்டுவனின் இளவல். ஒரு நாள் அரசவையில் இவர் தம் தந்தையுடனும் தமையனுடனும் வீற்றிருந்தகாலை ஒரு நிமித்திகன் வந்து இவரை அடிமுதல் முடிவரை நெடிது நோக்கி, அரசு வீற்றிருக்கும் இலக்கணம் இவருக்கு உண்டென, அது கேட்ட தமையன் செங்குட்டுவன் அழுக்காறு மிகுந்து கண்ணெரி தவழ அண்ணலை நோக்குவதைக் கண்ட இவர், உடனே தமையனுக்குத் துன்பம் வராதபடி அரசு துறந்ததைக் கூறிக் குணவாயிலிற் சென்று துறவு பூண்டு, "சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத் தந்தமிலின்பத் தரைசாள் வேந்த" ராயினார்.

இத்தகைப் பெரியீரராகிய இளங்கோவடிகளும், கூலவாணிகன் சாத்தனாரும் ஒரே காலத்தவர் என மேலே கூறினோம். சிலப்பதிகாரக்

கதைத் தலைவியாகிய கண்ணகிக்குக் கல் நாட்டு விழா நடைபெறுங்காலை இலங்கைக் கயவாகு முதலாவன் வந்திருந்தான் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அவனுடைய காலம் இரண்டாம் நூற்றாண்டு என்று இலங்கை மகாவம்சத்தினாலும் பிற ஆராய்ச்சியினாலும் கணிக்கப்பட்டுள்ளது. எனவே சிலப்பதிகாரக் காலம் இரண்டாம் நூற்றாண்டே என்பது பெறப்படும். அக்காலத்தே சாத்தனார் பாத்திரமாகிய மணிமேகலையுமாகும். அம் மணிமேகலையில் ''தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற அப்பொய்யில் புலவன் பொருளுரை'' என்று திருவள்ளுவரையும் அவர் நூலாகிய திருக்குறளையும் ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே திருவள்ளுவனார் காலம் 2ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தென்பது எளிதிற் பெறப்படும். கிறித்து பிறப்பதற்கு 30 ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் பிறந்தார் என்பது நான் ஆராய்ந்து கண்ட முடிபாகும்.

இனி, திருவள்ளுவரின் பெற்றோர் யாரென ஆராய்வாம்; எண்ணூறு ஆண்டுகட்குமுன் எழுதப்பட்ட ஞானாமிர்தம் என்ற நூலில் அவர்கள் பெயர் யாளிதத்தன் என்றும் ஆதியென்றும் குறிக்கப்பட்டுள்ளன. கபிலரகவல் என்ற மற்றொரு சிறந்த தமிழ் செய்யுள் நூலில் அவை பகவன் என்றும் ஆதி என்றும் குறிக்கப்பட்டுள்ளன. இக்கபிலர் சங்க காலக் கபிலரே என்பதும், இவர் கூறிய கதையில் பிறழ்ச்சி ஒன்றும் இல்லை என்பதும் உண்மைகளாகும். சொற்போக்கு, பொருள் வளம், நடை முதலிய வற்றை ஒப்பிடுவோர்க்கு இவ்வகவல் சங்க காலத்ததே என்பது புலனாம். ஆகையால், இதன்கண் கூறப்படும் உண்மைகள் கொள்ளத் தக்கனவே. இவ்வகவலில் ''வள்ளுவர் வளர்க்க வள்ளுவன் வளர்ந்தனன்'' என்று கூறப்பட்டுள்ளது.

இனி குறளிற் காணப்படுஞ் சொற்கள் எல்லாம் தனித்தமிழ்ச் சொற்களே. அந்நூலெழுந்த காலம் தனித்தமிழ் அன்னை அம்பலக் கூத்தனோடு தாண்டவமாடிய காலம்; உருக்கி வார்த்த பசும் பொற்பாவைபோல் அவ்வன்னை இன்பக் கூத்தாடிய காலம். மாசு நிறைந்து, திருவழிந்து, ஆரியமும், ஆங்கிலமும் ஆகிய அம்மைத் தழும்புகளுடன் தோன்றும் இக்காலத் தமிழ் அன்னையை யொத்து அக்கால அன்னையைக் காணல் முடியாது. எழுதியவெல்லாம்

தூய தமிழில் எழுதப்பட்ட அக்காலத்தில் எழுந்ததாகும் குறள் என்னும் ஒப்பிலாத தூய தமிழ் மறை.

அவ்வாறு கலப்பில்லாத் தூய தமிழில் எழுதப்பட்ட ஒரு நூலின் தொடக்கத்திலேயே ஆசிரியர் “ஆதி, பகவன்” என்ற இரு வடசொற்களை அமைத்திருத்தற்கு ஒரு சிறப்புக் காரணம் இருந்திருத்தல் வேண்டும் என்பது எளிதில் ஊகிக்கப்படும். தம்மை ஈன்றெடுத்த தாய் தந்தையரை ஒழுக்கத்திற் சிறந்த ஆசிரியர் போற்றுவதற்காகவே அவ்விரு சொற்களையும் முதற்கண் வைத்தார் என்று கோடல் மிகையாகாதென்பதே என் கருத்தாகும்.

பண்டைக் காலந் தொட்டே பரம்பொருளை அம்மையப்பராகப் போற்றி வரும் வழக்கம் தமிழ்நாட்டின்கண் இருந்து வந்துள்ளது. இவ்வழக்கம் எகிப்து, பாபிலோனியயா, எருசலேம் முதலிய நாடுகளிலும் பண்டைக்காலத்தில் இருந்தமை ஒப்புநோக்கி மகிழ்தற்குரியதாம். கத்தோலிக்கர்களின் கருத்தும் இக்கருத்தை ஒத்திருப்பதும் நோக்கற்குரித்தாகும். கடவுள் மகனைத் தன் வடிவிலேயே படைத்தார் என்பது விவிலிய நூற் கருத்து. கடவுளை ஆண் தத்துவத்தில் அப்பனாகவும், பெண் தத்துவத்தில் அம்மையாகவும் பரமபிதா என்றும் பரிசுத்த ஆவி என்றும் இன்றும் கிறித்தவர்கள் வணங்கி வருவது யாவரும் அறிந்ததே. ரிக் வேத்திலும் ஆண் வடிவமாகிய உருத்திரனுக்குப் பக்கத்தில் அம்மை வடிவம் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. உலகமே ஆண் பெண் வடிவு கொண்டதாகும். ஓரறிவு முதல் ஆறறிவு ஈறாகவுள்ள எல்லா உயிர்களின் மாட்டும் காணப்படும். இவ்விருவகைத் தோற்றத்திற்கு மூலம் இறைவனது உள்ளமே. ஆகவே, இவ்விருமைப் பண்பு தோற்றும் குறியீடாகிய உடம்பை இம்மண்ணிடைத் தமக்களித்த பெற்றோர்களுக்கு நன்றி கூறுவான் கருதியே ஆசிரியர் “ஆதிபகவன்” என்ற சொற்களை முதற்கண் அமைத்தார்.

...தொடரும்

அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறஆழி நீந்தல் அரிது. – குறள் 8

கோள்இல் பொறியின் குணம்இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. – குறள் 9

## திருவள்ளுவரின் திருக்குறள்

(சுவாமி யோகி சுத்தானந்த பாரதியார், புதுவை)

செய்யொத்த பயிர்போலச் செந்தமிழுஞ்
செழும்பொருளுஞ் சேர்ந்த செல்வம்
மையொத்த மனவிருளை மாற்றியொளிர்
மணிவிளக்கு மாந்தரெல்லாம்
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தமர
வாழ்வெய்த வழிந டத்துங்
கையொத்த நற்றுணைவர் **வள்ளுவனார்**
**திருக்குறளெங்** கண்க ளன்றோ! *1*

காதொளிருங் குண்டலமுங் கைக்குவளை
யாபதியுங் கருணை மார்பின்
மீதொளிர்சிந் தாமணியு மெல்லிடையில்
மேகலையுஞ் சிலம்பார் இன்பப்
போதொளிர்பூந் தாளிணையும் பொன்முடிசூ
ளாமணியும் பொலியச்சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் **திருக்குறளைத்**
தாங்குதமிழ் நீடு வாழ்க! *2*

தூய்மையே மணிமார்பு; தொன்மறையின்
பிழிசாறாய்த் துலங்கு கின்ற
வாய்மையே மணிவாக்கு; மங்கலஞ்செய்
மனைவாழ்வே கண்கள் வீர
நேயமுறு பொதுநலமே திருமேனி;
நிறையின்ப முறுவல் பூத்துத்
தாயமுதம் விளங்குகின்றாள்—**அறத்தேவி**
**திருக்குறளாய்**—தாள்பெற் றுய்வாம்! *3*

நால்வரிசை யமுதிருக்க, நம்மாழ்வார்
மொழியிருக்க, சேக்கி ழாரின்
பால்வடிசெந் தமிழிருக்கக் கம்பச்சித்
திரமிருக்கப் பகலே போன்று
ஞாலத்தி லறம்விளக்கும் **நாயனார்**
**குறளிருக்க** நமது நற்றாய்
காலத்தை வென்றோங்குங் கற்பகமாய்
கனிபெருகக் கண்டி டோமோ! 4

சாதிமதச் சச்சரவேன்? மேல்–கிழக்குச்
        சழக்குகளேன்? சகத்தீர் வம்மின்!
மேதினியுண் டானபொழு துண்டான
        பொதுநெறியை விளங்கக் காணீர்!
தீதிரிய நலம்பரவத் **தேவர்திரு**
        **வாய்மொழியை** யியல்பாய்ப் போற்றி
யோதியுணர்ந் தெல்லாரும் ஒற்றுமையாய்
        வாழ்ந்திடுவோம்! உண்மை வெல்க! 5

–––––

**மன்றத்தில் நிகழ்ந்தவை**

## சிவராத்திரி வழிபாடு

சிவராத்திரி வழிபாடு பெப்ரவரி 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் கூட்டுறவு இல்ல மண்டபத்தில், நடை பெற்றது. முதலில் கூட்டு வழிபாடும் பூசையும் இடம் பெற்றன. வழிபாடு மாலை 5:30 மணிக்கு ஆரம்பித்து நள்ளிரவு லிங்கோற்பவ காலத்துடன் நிறைவுற்றது. சிவிலிங்கத்திற்கு பால் அபிடேகமும் சிறப்புப் பூசைகளும் இடம் பெற்றன. சிவபுராணம், நமச்சிவாயப் பதிகங்கள், யோகர் சுவாமிகள் நமச்சியவாயப் பத்து முதலியனவும் சிவநாமங்களும் மாறி மாறி பக்தர்களால் ஓதப்பட்டன.

மாணவர்களது பேச்சுக்களும், வாசிப்புக்களும் இடம் பெற்றன. தங்கள் தங்கள் பிரிவுக்குக் கொடுக்கப்பட்ட கட்டுரைகளை சிறப்பாகப் பேசினார்கள். வழிபாடு நான்கு பூசைகளாகப் பிரிக்கப்பட்டு லிங்க அபிடேகமும் சிறப்புப் பூசையும் இடம் பெற்றன. மன்ற உறுப்பினர்கள் சிறப்பு உபயமாக எடுத்து செய்தமை குறிப்பிடத் தக்கது. அன்று உலக சைவப் பேரவையினரது நந்திகொடியினையும் அன்பர்கள் பெற்று அன்பளிப்புச் செய்தனர். நள்ளிரவு 12::30 வழிபாடு நிறைவுற்றது.

(குறிப்பு: பெற்ற அன்பளிப்புத் தொகை உலக சைவப் பேரவை, கனடா கிளைக்கு அனுப்பி வைக்கப் பெற்றது.)

**அரிக்கும் பிரமற்கும்** அல்லாத தேவர்கட்குந்
தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும் பணிகொள்ளும் என்பதுகேட் டுலகமெல்லாஞ்
சிரிக்குந் திறம்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

– மாணிக்கவாசக சுவாமிகள்



# இறைவன் இதயவாசி

(பேரறிஞர் முருகவே பரமநாதன், அன்புநெறி சிறப்பாசிரியர்)

இறைவன் கடவுள் என்ற பொருளிலே வரும். இறைவன் ஆண்பால் இதன் எதிர்பால் இறைவி. இறை அரசனுக்கும் அமையும். இறைமாட்சி பற்றித் திருவள்ளுவர் ஒரு அதிகாரம் தந்துள்ளார். இறை பொழுது எனின் இமை நொடிக்கும் பொழுது. கைவிரலில் அமைந்த வரையை இறை என்பர். இறை குத்தி நீர் விட்டு அரிசி போட்டுச் சமைப்பது ஒரு சமையல்முறை. ''இமைப்பொழுதும் எந்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என்பது மணிமொழி. இந்த இறைவனே தெய்வம், கடவுள், ஆண்டவன், ஈசன், பகவன், பகவான் என்பதெல்லாம் தெய்வந் தொடர்பான பாவனைகள். இறைவன் எங்கும் தங்குகிறவன் என்பார் அடியார்க்கு நல்லார். தங்குவது தங்கச் செய்வது இறைவன் எப்பொருளிலும் தங்குதலை உடையவன். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது எது என்ற தாயுமான சுவாமிகளின் முதற் பாடல் இதற்கு விளக்கம் தருகிறது. எங்கும் நிறைந்த பரம்பொருள் உள்ளத்திலே உறைகிறான் என்றோர் நினைப்பு. இந்த இறைவனின் தரிப்பிடம் இதயம் என்பர். ஆதலினால் இவனை இதயநாதன் என்பர். இந்த இறைவன் இருதயம் பற்றி இனிச் சிந்திப்போம்.

கிறித்தவ சமயம் பரிசுத்த இருதயம் (Sacred Heart) பற்றிப் பேசும். கல்லூரிகள், சமயநிலையங்கட்கும் இப்பெயர் சூட்டுவர். இருதயநாத் என்ற பெயர் வைப்பர். இயேசு பிரானின் பரிசுத்த இருதயத்தை உருவிலே ஓவியத்திலே அமைப்பர். இராம பக்த அனுமானின் இருதயத்திலே இராமன் குடி கொண்டிருக்கிறான். உளத்தூய்மை, மனப்புனிதம் யாவர்க்கும் இன்றியமையாதது. மனநலம், இனநலம் பற்றி வள்ளுவர் பேசியுள்ளார். எனவே தெய்வம் பற்றித் தெரிவோம்

> கட்டியணைத்திடும் பெண்டீரு மக்களுங் காலத்தச்சன்
> வெட்டி முறிக்கு மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
> கொட்டி முழக்கி யழுவார் மயானங் குறுகிவிட்டால்
> எட்டி அடி வைப்பரோ **இறைவா** கச்சியேகம்பனே.
>
> –திருவேகம்பமாலை–பட்டினத்தார் 2

பொருள்– வெளிச்சம், காலத்தச்சன் – இயமன், சீரம்–உடம்பு, கொட்டிமுழக்குவது – சாப்பறையடித்தல்.

ஏகன் அநேகன் **இறைவன் அ**டி வாழ்க.
– சிவபுராணம் – வரி *5*

**இறைவனே** நீ என் உடலிடங் கொண்டாய்
– கோயில் திருப்பதிகம் – 5

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
**இறைவன்** அடி சேராதார் – குறள் *10*

**இறைவன்** அருட்குடைக்கீழ் எல்லோரும் இன்ப
நிறைவுற்று வாழ்க நிதம் – யோகசித்தி–சுத்தானந்தர்

**இறைக**ளோ(டு) இசைந்த இன்பம்
இன்பத்தோடு இசைந்த வாழ்வு
– சுந்தரர் –திருவாரூர் *14*

**இறையவன்** மாதவன் இன்பம் படைத்த
மறையவன் மூவரும் வந்துடன் கூடி
இறையவன் செய்த இரும்பொறி யாக்கை
மறையவன் வைத்த பரிசு அறியாரே –திருமந்திரம் *443*

இறையவன் – சிவன், மாதவன் – திருமால், மறையவன் – பிரம்மா

சைவசமயியான பூசலார் தமக்குள்ளேயே கோவில் சமைத்து இறைவனைப் பூசித்தார். மன்னவன் அமைத்த ஆலயத்துக்கு இறைவன் வேறொரு தினம் குடியேறினார். இறைவன் பெயரிலேயே ஒரு அகத்துறை இலக்கியம் எழுந்துள்ளது. அதுவே இறையனார் அகப்பொருள். இந்த ஆலய அமைப்பு வைணவத்திலும் இடம் பெற்றுள்ளது. மங்களா சாசனம் செய்த திருப்பதிகங்கள் *108*

**இறையாய்** நிலனாகி எண்டிசையும் தானாய்
–திருநாலாயிரம் *2320*

இறையெம்பெருமான் அருளென்று இமையோர்
முறை நின்று மெய்ம்மலர் தூவ
–திருநாலாயிரம் *2280.*

ஆலயம், கோயில், சினகர், சேத்திரம், இறை இல்லம் வழிபாட்டு இடங்களைக் குறிக்கும். நாமெல்லாம் ஆலயங்களிலே தான் இறைவன் இருக்கிறது என்ற நம்பிக்கையோடு வணக்கத்

தலங்களுக்குப் போகிறோம். அங்கே இறைவனோடு பேசி அருள் பெறுகிறோம். மணிமொழியார்

"கரங்குவிவார் உண்மகிழும் கோன் கழல்கள் வெல்க" எனப் பாடியுள்ளார். வழிபடுபவர் இறைவனோடு தொடர்பு கொண்டு மனம் மகிழ்கிறான் என்பது திருவாசகக் கூற்று.

இந்த இதயம் பௌதிகத் தன்மையான இரத்தாசயத்தையும் குறிக்கும். மனம், உள்ளம், நெஞ்சம், சிந்தை என்பன ஒரே பொருளன. இதை அருளாளர்கள் எடுத்தாண்டுள்ளனர்.

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கிலுள்ளான்
– அப்பரடிகள்

உள்ளத்திற் காண்பாயெனில்
கோயில் உள்ளேயும் காண்பாயெடி
– கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் – அப்பரடிகள்

சிந்தைத்துய ரென்றொரு பாவி
சினந்து சினந்து போர் மயங்கி – தாயுமானவர்

எத்தனை விதங்கள்தான் கற்கினும், கேட்கினும்
என் இதயம் ஒடுங்கவில்லையே – தாயுமானவர்

எதிரி லாத பக்தி தனைமேவி
இனிய தாணி னைப்பையிருபோதும்
**இதய** வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே – அருணகிரியார்.
(இதயம் – மனம்)

மனித சரீரம்தான் திருக்கோயில் அமைப்பு என்பர். இந்த உடம்புள்ளே இறைவன் குடி கொண்டு இருக்கிறான் என்பது தத்துவஞானிகள், சித்தர்கள், அருளாளர்கள் கருத்து. இதயம் என்கின்ற மனம் பற்றியும், இறைவன் என்கின்ற கருத்துப் பொருள் பற்றியும் முன்னர் கண்டோம். இப்போ இறைவன் மனித உடலில் வீற்றிருந்து அருள்பாலிப்பதை இனி ஆராய்வோம்.

எந்தையே ஈசா! உடல் இடம் கொண்டாய்
யான் இதற்கு இலன், ஓர் கைம்மாறே!
–திருவாசகம் : கோயில் திருப்பதிகம் 10

உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர்
எழுதரு நாற்றம் போல்,
பற்றலாவ தோர் நிலையிலாப் பரம் பொருள்
அப் பொருள் பாராதே.
–திருவாசகம் : அதிசயப்பத்து 9

பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள் – ஐம்புலன்களாற் பற்றப்படுவதோர் தன்மையிலாத மேலான மெய்ப்பொருள் (சிவன்)

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக
நேயமே நெய்யும் பாலாய் நிறை நீரமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றிவிக் காட்டினோமே. –அப்பர் 4:76:4

உள்ளத்து ஒருவனை உள்ளுறு சோதியை
உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் ஒன்றாய் இருக்கினும்
உள்ளம் அவனை உருவு அறியாதே. –திருமந்திரம் 431

பூவினிற் கந்தம் பொருந்தியவாறு போல்
சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது –திருமந்திரம் 1459

இவ்வணம் இறைதத்துவம் இருக்க நாம் புறப்பக்கம் பார்த்து தெய்வங்களையும், சடங்குகளையும் கூட்டி ஆலயங்களைப் பெருக்கிப் பயனில்லை. சைவாலயங்கள் சமுதாய மையங்களாய் மாற வேண்டும். சமய விளக்கம் இளம் பரம்பரையைச் சென்று சேர வேண்டும். அன்றேல் நாவலரைப்போல் ஒரு மகான் அவதரிக்க வேண்டும்.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
– – – – –



# சித்தாந்த நூல்களில் திருக்குறள் சிந்தனைகள்

(சித்தாந்தகலாநிதி, சைவநன்மணி, சைவசித்தாந்த சாகரம், முனைவர் கோமதி சூரியமூர்த்தி, 'அன்புநெறி' சிறப்பாசிரியர்)

**சிவப்பிரகாசம்**

இதன் ஆசிரியர் உமாபதிசிவம். இந்நூல் காப்புச்செய்யுள் ஒன்றும், 100 விருத்தப்பாக்களும் கொண்டது. இறைவன் விருப்பு, வெறுப்பற்றவன் என்பதை "வேண்டுதல் வேண்டாமை இலான்" (குறள், 4) என்று வள்ளுவர் கூறுவது போல உமாபதிசிவமும்,

" **தாங்கரிய வெறுப்பினொடு விருப்பும் எல்லாம்**
**சார்வரிய தனி முதல்வன்** " (சிவப்பிரகாசம், 15)

என்று கூறுகின்றார்.

**திருவருட்பயன்**

இதன் ஆசிரியரும் உமாபதிசிவம் தான். இந்நூல் காப்புச் செய்யுள் ஒன்றும், 100 குறள் வெண்பாக்களும் கொண்டது. ஒரு அதிகாரத்திற்குப் பத்துக் குறள்கள் வீதம் பத்து அதிகாரங்களைக் கொண்டது. குறள் வெண்பாவான இந்நூலில் திருக்குறள் சிந்தனைகளும் அதிகம் காணப்படுகின்றன.

**இறைவனின் முதன்மை**

அகர முதல் எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. (குறள், 1)

என்ற திருக்குறளை அடியொற்றி உமாபதிசிவம்,

'அகரஉயிர் போல் அறிவாகி எங்கும்
நிகரில்இறை நிற்கும் நிறைந்து' (திருவருட்பயன், 1)

என்கின்றார். இரண்டு குறட்பாக்களையும் ஆழ்ந்து ஆராய்வோருக்கு ஒரு நுட்பமான வேறுபாடு புலப்படும். வள்ளுவர் இறைவனை அகர எழுத்துக்கு ஒப்பிடுகிறார். உமாபதிசிவம் இறைவனை அகர எழுத்துக்கு ஒப்பிட்டாலும் அதிலிருந்து வேறுபடுத்தி இறைவனை மேன்மையுடையவனாய் 'அறிவாகி' என்ற சொல்லால் புலப்படுத்துகிறார். அகர உயிருக்கு அறிவு கிடையாது. இறைவனோ இயற்கையுணர்வும், முற்றுணர்வும் உடையவன். அகரத்தைப் போல் ஏனைய உயிரெழுத்துக்கள்

உண்டு. அகரமாகிய குறிலைப் போல வேறு சில குறில்களும் உண்டு. ஆதலால் இறைவனுக்கு ஒப்பு ஒன்றுமில்லை என்பதை 'நிகரில் இறை' என்ற சொல்லால் திருவருட்பயன் உணர்த்துகின்றது.

**இறைவன் ஒப்பற்றவன்**

இறைவனுக்கு ஒப்பாக யாரையுமே கூற முடியாதாகையால் வள்ளுவர் 'தனக்கு உவமை இல்லாதான் (குறள், 7) என்கின்றார். உமாபதிசிவமும்,

"நிகரில் இறை" (திருவருட்பயன், *1*)
"ஒப்பின்மையான்" (மேலது, *3*)
"மேல் ஒருவன் இல்லாதான்" (மேலது, *6*)

என்பவற்றால் அவன் ஒப்பற்றவன் என்பதையும் புலப்படுத்துகிறார்.

**உயிர்களின் பிறப்பறுப்பவன்**

பிறவியைக் கடலாகவும், இறைவனடியை அக்கடலைக் கடக்க உதவும் தெப்பமாகவும் உருவகிக்கின்றார் வள்ளுவர்.

'பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவன் அடி சேராதார்' (குறள், *10*)

இக்குறளின் கருத்தைத் தழுவி உமாபதிசிவம் பிறவியை நோயாகவும், அந்நோயைத் தீர்க்கும் மருந்தாக இறைவனையும் உருவகிக்கின்றார்.

'உன்னும் உனது ஐயம் இலது உணர்வாய் ஓவாது
மன்னு பவம் தீர்க்கும் மருந்து' (திருவருட்பயன், *10*)

**உயிர்கள் கணக்கற்றவை**

உயிர்கள் எண்ணில்லாதவை என்பதை உமாபதிசிவம் ஓர் உவமை மூலம் விளக்குகின்றார். உயிர்கள் முன்பு பிறந்த நாட்களுக்கும், இனிமேல் பிறக்கப்போகிற நாட்களுக்கும் இத்தனையென்று தொகையில்லாதது போல, தேகாதி பிரபஞ்சத்தைத் துறந்து இறைவனடி அடைந்தோர்கட்கும், இனிமேல் துறந்து அடையப் போகிறவர்கட்கும் ஓர் அளவில்லை என்பதை,

' பிறந்தநாள் மேலும் பிறக்கும் நாள் போலும்
துறந்தோர் துறப்போர் தொகை' (திருவருட்பயன், *11*)

என உமாபதிசிவம் கூறுகின்றார்.

'துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று' (குறள், *22*)

என்ற திருக்குறள் இங்கு ஒப்பிட்டுச் சிந்திக்கத்தக்கது.

**உயிர்கள் சார்ந்ததன் வண்ணமாகும் தன்மையுடையது** தோற்றக் கேடின்றி என்றும் மாறுதலடையாத செம்பொருளைச் சத்து என்றும், தோன்றி, நின்று, அழியும் பொருட்களை அசத்து என்றும் சித்தாந்தம் குறிப்பிடும். சத்து – இறைவன். அசத்து – உலகம். இவ்விரண்டையும் அழுந்தி அனுபவிப்பது உயிர். அவ்வாறு அனுபவிக்கும் பொழுது உயிர் தான் சாரும் பொருட்களின் தன்மையைப் பெறும். எனவே உயிர் சதசத்து என்று குறிப்பிடப்படும். (திருவருட்பயன், *17*)

"நிலத்தியல் பால்நீர் திரிந்தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல் பதாகும் அறிவு" (குறள், 452)

என்ற திருக்குறளின் உட்கருத்து உயிர்களின் சார்ந்ததன் வண்ணமாம் பண்பினை உணர்த்துவதாகும்.

## உயிர்களின் பிறவித்துன்பம்

அனாதியே தொடங்கி இன்று வரையும் எண்ணிறந்த துன்பத்தை உயிர்கள் தாங்கி நிற்கின்றன. அந்தோ! திருவருளாகிய ஞானத்தினைக் கண்டு துன்பம் தீர்ந்து அவை பேரின்பம் எய்தும் நாள் என்றோ என,

'அன்றளவும் ஆற்றும்உயிர் அந்தோ அருள்தெரிவது
என்று அளவொன்றில்லா இடர்' (திருவருட்பயன், *20*)

என்று உயிர்கள்படும் துன்பத்தைக் கண்டு உமாபதிசிவம் இரங்குகின்றார்.

'இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு' (குறள், *1029*)

என்ற வள்ளுவர் வாய்மொழி இங்குச் சிந்திக்கத்தக்கது. குடும்பத்துக்குக் குற்றம் வராதபடி காக்கின்றவனது உடம்பு அம்முயற்சித் துன்பத்திற்கே இருப்பிடம் ஆகும் போலும் என்பது குறளின் பொருளாகும். உயிர்கள் அனுபிவிக்கின்ற துன்பம் பற்றிக் கூறுவதில் இரு நூல்களுக்கிடையே ஒப்புமை காணப்பட்டாலும், துன்பத்திற்கும் காரணம் கூறுவதில் வேறுபடுகின்றன. வள்ளுவர் துன்பத்திற்குக் காரணமாய்க் குடும்பத்தைக் காக்கச் செய்கின்ற முயற்சியை – வினையைக் கூறுகின்றார். உமாபதிசிவம் பிறவித் துன்பத்திற்குக் காரணமாக உயிர்களை அநாதியே பற்றியுள்ள அகஇருளாகிய ஆணவத்தைக் காரணமாகக் கூறுகின்றார். மேலும் துன்பநீக்கத்திற்கு வழியும் புலப்படுத்துகின்றார். உயிர்கள் அருளை

உணர்ந்து அதன் வழி ஒழுகினால் துன்பம் தீர்ந்து பேரின்பம் அனுபவிக்கலாம் என்று உமாபதிசிவம் கூறுகின்றார்.

**அருளே மேலான செல்வம்**

உயிர்கள் அனாதியே பற்றியுள்ள இருள்மலப் பிணிப்பிலிருந்து நீங்கி உய்திபெறத் துணை செய்து உடன் நிற்பது இறைவனது திருவருளேயாதலால், அருட் செல்வத்தை விடப் பெரிய செல்வம் அகிலத்தில் இல்லை என்பதை,

'அருளில் பெரியது அகிலத்தில் வேண்டும்
பொருளில் தலையிலது போல்' (திருவருட்பயன், *31*)

என்று உமாபதிசிவம் உணர்த்துகின்றார். "அகிலத்திது வேண்டும் பொருளின் தலையிலது போல் அருளில் பெரியது இல்" என அமைத்து பொருள் காணல் சிறப்பு. உலகியல் செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் தலைசிறந்த செல்வம் அருட்செல்வம் என்ற கருத்துடன்

"அருட்செல்வம் செல்வத்துள் செல்வம், பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள" (குறள், *241*)

'அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி அங்கு' (குறள், *247*)

என்ற வள்ளுவர் வாய் மொழிகள் ஒப்பிட்டுச் சிந்திக்கத்தக்கன.

**வினை பற்றிய சிவநெறிக் கொள்கைகள்**

கடவுளை ஒப்புக் கொள்ளாத சமயங்களும் வினை உண்மையை ஒப்புக்கொள்ளும். ஆனால் கடவுளை ஒப்புக்கொள்ளும் சமயங்களே வினைப்பலன்களையும், அப்பலன்களை ஊட்டுபவன் இறைவன் என்பதையும் வலியுறுத்தி விவரித்துக் கூறும். "நீ உய்தற்பொருட்டு, வினையைச் செய்பவனும், வினையும், அதன் பயனும் அப்பயனை ஊட்டுவிப்பானும்உண்டென்று உணர். வினையைச் செய்பவனும் வினையும், அதன் பயனும், அப்பயனை ஊட்டுவிப்பானும் உண்டென்று உணர்" என உமாபதிசிவம் கூறுகின்றார் (திருவருட்பயன் *53*). இங்கு

"வகுத்தான் வகுத்த வகையல்லாமல் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது." (குறள், *377*)

என்ற திருக்குறள் கருத்து ஒப்பிட்டுச் சிந்திக்கத்தக்கது.

**சீவன்முத்தர்கள் புலனடக்கம் மிக்கவர்கள்**

எதிர்ப்பு வரும்போது நிலத்தில் நடக்கும் ஆமை உறுப்புக்களை வெளியே காட்டாமல் உள்ளே வாங்கி அசைவற்றுக் கிடப்பது போல, சீவன் முத்தர்கள் தம் உள்ளத்தைப் புலன் வழியே செல்லவிடாது அருளில் அடங்கிக் கிடப்பர்.

"புலனடக்கித் தம்முதற்கண் புக்குறுவர் போதார்
தலம் நடக்கும் ஆமை தக." (திருவருட்பயன், *94*)

என்கிறார் உமாபதிசிவம். புலனடக்கத்திற்கு ஆமையை உவமையாக,

"ஒருமையுள் ஆமை போல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து." (குறள், *126*)

என்று வள்ளுவர் கூறுவது இங்கு ஒப்புநோக்கிச் சிந்திக்கத் தக்கது. உமாபதிசிவம் சீவன் முக்தர்களின் புலனடக்கத்திற்குத் தரையில் நடக்கும் ஆமையை உவமையாகச் சுட்டுவதுடன் நிற்க, வள்ளுவர் புலனடக்கம் ஒருவனை ஏழுபிறப்புகளிலும் தீமையிலிருந்து பாதுகாக்கும் என்று அதன் மேன்மையை உணர்த்துகின்றார்.

**நெஞ்சுவிடுதூது**

இதன் ஆசிரியரும் உமாபதிசிவமே. இந்நூல் கலிவெண்பாவால் ஆனது. *129* கண்ணிகளை உடையது. இந் நூலாசிரியர் தம்மைத் தலைவியாகவும், தம் ஞானாசிரியரான மறைஞானசம்பந்தரைத் தலைவராகவும் கருதி, அவரிடம் சென்று அவரருளைப் பெற்று அதற்கு அடையாளமாக அவரிடமுள்ள மாலையை வாங்கிவருமாறு தம் நெஞ்சைத் தூதாக அனுப்பும்போது, சில அறிவுரைகள் கூறுகின்றார். உயிர்கள் புலன் வயப்படுவதால் மயக்கமுற்று பிறவியுள் படுதலை விவரித்து, முழுமுதல் தலைவனைத் தவிர வேறு துணையில்லை என்ற உண்மையை உணர்ந்து, தன்னறிவையும் அவ்வறிவுக்கறிவாய் விளங்கும் பரம்பொருளை உணர்ந்து அழுந்தி அனுபவிப்பவர்களே உலகை முற்றும் துறந்தவராவர் என்று கூறுமிடத்து,

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்" (குறள், *348*)

என்று திருக்குறளின் சொல்லையும், பொருளையும் அப்படியே உமாபதிசிவம் பின்வருமாறு எடுத்தாள்கிறார்.

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் என்று – நிலைத்தமிழின்
தெய்வப்புலமைத் திருவள்ளுவர் உரைத்த
மெய்வைத்த சொல்."

(நெஞ்சுவிடுதூது, கண்ணி 24)

**முடிவுகள்**

1. வள்ளுவனால் வான்புகழ் கொண்டது தமிழ்நாடு. தமிழகம் தந்த தத்துவநெறியே சித்தாந்தம் ஆகும்.
2. தண்டமிழின் சிறந்த ஆறுநூல்களுள் சிவஞான சித்தியாரும், திருக்குறளும் கூறப்பட்டிருப்பது பெருமை தருவதாகும்.
3. சித்தாந்த நூலாசிரியர்கள் சாத்திரக் கருத்துக்களை விளக்கத் திருக்குறளை மேற்கோள்களாக கையாண்டுள்ளனர்.
4. சாத்திர நூலாசிரியர்கள் திருக்குறளின் சொல்லையும், பொருளையும் பொன்னேபோல் போற்றியுள்ளமை இவ் ஆய்வால் புலனாகும்.
5. திருக்குறளின் அமைப்பை ஒட்டி குறள் வெண்பாக்களாலான திருவருட்பயன் என்ற சாத்திரநூலில் திருக்குறளின் சிந்தனைகள் அதிகம் காணப்படுகின்றன.
6. சாத்திரக் கருத்துக்களுடன் ஒத்த திருக்குறள் கருத்துக்களை ஒப்பிட்டுச் சிந்திக்குமிடங்களில் சிலவற்றில் இரண்டிற்கும் இடையே காணப்படும் நுட்பமான வேறுபாடுகளும் இவ் ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.
7. நீதிநூலான திருக்குறளிலும் சிவநெறிக்கொள்கைகள் உள்ளடங்கியுள்ளமை இவ்ஆய்வில் தெற்றென புலனாகும்.


முற்றும்

(**குறிப்பு:** அமெரிக்காவில் நடைபெற்ற பன்னாட்டுத் திருக்குறள் ஆய்வு மாநாட்டிற்கு முனைவர் கோமதி சூரியமூர்த்தி அவர்கள் அனுப்பிய இரு கட்டுரைகளுள் ஒன்று.)

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. குறள் 4

**சிறுவர் பகுதி**

## ஆறுமுகநாவலர் சைவ வினாவிடை-2



**1. பதியியல்** (தொடர்ச்சி)

16. சிவபெருமான் இம்மூவகைத் திருமேனிகளையும் உடையபொழுது எவ்வெப் பெயர் பெறுவார்,

அருவத் திருமேனியை உடைய பொழுது சிவன் எனவும், அருவுருவத் திருமேனியை உடைய பொழுது சதாசிவன் எனவும், உருவத் திருமேனியை உடைய பொழுது மகேசுரன் எனவும் பெயர் பெறுவர்.

17. சிவபெருமானுடைய உருவம் ஆனமாக்களாகிய நம் போலிகளுடைய உருவம் போன்றதா?

ஆன்மாக்களுடைய உருவம் இருவினைக்கு ஈடாகிய தாதுக்களால் உண்டாகிய உருவம். சிவபெருமானுடைய உருவம் ஆன்மாக்கள் செய்யும் தியானம், பூசை முதலியவைகளின் பொருட்டுச் சிவசக்தியாகிய திருவருட் குணங்களுள் இன்னது இன்னது, இன்ன இன்ன அவயவம் என்று பாவிக்கப்படும் உருவம்.

18. சிவபெருமான் ஐந்தொழில்களையும் தாமே செய்வாரா?

சுத்த மாயையிற் கிருத்தியம் ஐந்துந் தாமே செய்வார். அசுத்த மாயையிற் கிருத்தியம் ஐந்தும் அனந்தேசுரரை அதிட்டித்து நின்று செய்வார். பிரகிருதியின் கீழ் உள்ள கிருத்தியம் ஐந்தும் அனந்தேசுரர் வாயிலாக ஸ்ரீ கண்டருத்திரரை அதிட்டித்து நின்று செய்வார். ஸ்ரீகண்டருத்திரர் பிரம்மாவை அதிட்டித்து நின்று படைத்தலையும், விட்ணுவை அதிட்டித்து நின்று காத்தலையும், காலருத்திரரை அதிட்டித்து நின்று அழித்தலையும் செய்வார். (அதிட்டித்தல் – நிலைக்களமாகக் கொண்டு செய்தல்).

19. ஸ்ரீகண்டருத்திரர் இன்னும் எப்படிப்பட்டவர்?

சைவாகமங்கள் அறிவிக்கும் ஆசாரியர், பிரம்மா, விட்டுணு முதலிய தேவர்களுக்கும் இருடிகளுக்கும் அறுபத்துமூவர் முதலாயினோர்களுக்கும் விக்கிரக அனுக்கிரகங்களை செய்யும் கருத்தா. சைவத்திற் புகுந்து சைவசமயதீட்சை பெற்றவர் வழிபடும் மூர்த்தி.

20. பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்று ஐவருடைய சக்திகளுக்குப் பெயர் என்ன?

பிரம்மாவினுடைய சக்தி சரஸ்வதி, விட்டுணுவினுடைய சக்தி இலக்குமி, உருத்திரனுடைய சக்தி உமை, மகேசுரனுடைய சக்தி மகேசுவரி, சதாசிவனுடைய சக்தி மனேன்மணி.

21. ஆன்மாக்களாலே பூசித்து வழிபடப்படும் சதாசிவ வடிவம் யாது?

பீடமும் லிங்கமுமாகிய கன்மசாதாக்கிய வடிவமாம். பீடம் சிவசக்தி, இலிங்கம் சிவம்.

22. இலிங்கம் என்பதற்குப் பொருள் என்ன?

படைத்தல், காத்தல் முதலியவற்றினால் உலகத்தைச் சித்திரிப்பது. (லிங்க – சித்திரித்தல்)

23. மகேசுர வடிவம் எத்தனை?

சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர், சபாபதி, கல்யாணசுந்தரர், பிட்ஷாடணர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், ஹரியத்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், கசமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், என்னும் இருபத்தைந்துமாம்.

திருச்சிற்றம்பலம்

## 2. பசுவியல்

24. ஆன்மாக்க்ளாவார் யாவர்?

நித்தியமாய், வியாபகமாய்ச், சேதனமாய்ப், பாசத் தடைஉடையோராய்ச், சார்ந்ததன் வண்ணமாய்ச், சீரந்தோறும் வெவ்வேறாய், வினைகளைச் செய்து வினைப்பயன்களை அனுபவிப்போராய்ச், சிற்றிறவும், சிறுதொழிலும் உடையோராய்த் தமக்கு ஒரு தலைவனை உடையவராய் இருப்பவர். (சேதனம்– அறிவுடைப் பொருள்)

25. ஆன்மாக்கள் எடுக்கும் சீரம் எத்தனை வகைப்படும்?

தூல சீரம், சூக்கும் சீரம் என இரண்டு வகைப்படும்.

...தொடரும்.

சென்ற இதழின் தொடர்ச்சி........

# சைவபோதம்

(சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம், பி.ஏ. அவர்கள்)

## மூன்றாம் அதிகாரம்-பாசங்கள்

### கன்மம்

கடவுளுக்கும் மெய்யடியாருக்கும் செய்யப்படும் தொண்டுகளும் வழிபாடும் சிவ நல்வினை அல்லது சிவ புண்ணியம் எனப்படும். மற்றைய ஆன்மாக்களுக்குச் செய்யப்படும் நல்வினை பசு நல்வினை அல்லது பசு புண்ணியம் எனப்படும்.

வினையானது மனம், மொழி, மெய் என்னும் மூன்றின் வழியாகச் செய்யப்படும். களவு செய்ய வேண்டும் என்று எண்ணுதல் மனத்தினாற் செய்யப்படும் வினை. களவு செய்யும்படி ஒருவனை ஏவுதல் மொழியினாற் செய்யப்படும் வினை. களவு செய்தல் மெய்யினாற் செய்யப்படும் வினை. (மெய்–உடம்பு).

ஒருவன் என்னை ஏசுகிறான் அப்போது "என்னை இவன் ஏசலாமா? நான் இவனுக்கு அடிக்க வேண்டும்" என்ற தீய எண்ணம் ஆணவத்தின் முயற்சியினால் உண்டாகிறது. அந்த எண்ணத்தை அடக்காவிட்டால் நமக்கு எத்தனையோ தீமைகள் உண்டாகும்.

**முதலாவது:** நான் அவனுக்கு அடித்தால் அவன் எனக்கு அடிப்பான். நமக்குக் கோபம் உண்டாகும். கோபத்தினாலே கொலை முதலான பெரும் பிழைகள் செய்ய வேண்டி நேரிடும்.

**இரண்டாவது:** இன்றைக்கு என்னுடைய கோபம் ஒருவனிலே பலித்ததானால் நாளைக்குக் கோபம் இரண்டு பங்காக வரும். ஆணவத்துக்கு இடங் கொடுத்தால், அது ஆன்மாவை நல்வழியிற் செல்ல விடாது.

**மூன்றாவது:** கெட்ட செய்கைகள் அதிகமாகச் செய்து வந்தால், அந்தப் பழக்கமே கெட்ட செய்கையைப் பின்னும் செய்விக்கும். நாம் பிழையென்று நினைத்தாலும் நம்முடைய சொல்லுக்கு அமையாமல் சரீரம் செய்துவிடும். நமது நண்பர் ஒருவர் மாமிசம் சாப்பிடுதல் பாவச் செய்கையென்று நன்றாக உணர்ந்து அதை விடவேண்டுமென்று தீர்மானித்தார். வீட்டிலே அது சமைக்கக் கூடாதென்று கட்டளையிட்டார். ஆயினும், அவருடைய நண்பரொருவர் அவரையும் வேறு சிலரையும் ஒருநாள்

விருந்துக்கு அழைத்தார். அங்கே மாமிச போசனமும் தாவர போசனமும் வெவ்வேறு இடத்திலே வைக்கப்பட்டிருந்தன. இவர் மாமிசத்தைக் கண்டவுடனே வாயூறித் தம்முடைய தீர்மானத்தைப் பொருட்படுத்தாமல் மாமிசத்தை உண்டார், "நீங்கள் ஏன் இந்த வேலையைச் செய்தீர்கள்" என்று அவருடைய சிநேகிதர் கேட்டபொழுது "வாய் சொல்வழி கேளாதாம்" என்று மறுமொழி சொன்னார். இப்படியாகச் சிலர் ஒரு செய்கையைப் பலமுறை செய்வதினால், அவர்களுடைய சீரம் அவர்களுடைய சொல்லைக் கேளாமல் வழக்கப்படி நடப்பதுண்டு. இயல்பாக மனம் தலைவனும், சீரம் அடிமையுமாய் உள்ளன. ஒரு பழக்கத்தைப் பழகி விட்டால் சில காலங்களிலே சீரம் தலைவனாயும், மனம் அடிமையாயும் மாறி விடுகின்றன.

**நாலாவது:** தீவினை செய்தவர்கள் அதற்காக இந்தப் பிறவியிலும் நரகங்களிலும் அடுத்த பிறவிகளிலும் வருந்துவார்கள். நெருப்பிலே கை வைத்தவனுக்குக் கை புண்ணாவது நிச்சயமாவது போல, தீவினை செய்தவர்களுக்குப் பலவகையான துன்பங்கள் உண்டாவது நிச்சயம்.

இப்படியல்லாமல் கோபம் வந்தபோது கோபத்தை அடக்கினால் மனத்திற்குச் சஞ்சலமில்லை. பின்னொருமுறை கோபம் வருகிறபொழுது அதை அடக்குவது இதிலும் பார்க்க எளிதாயிருக்கும். ஆணவம் வலி குறையும். நாம் கோபத்தை அடக்கிவிட்வோடம் என்று ஒரு மகிழ்ச்சி உண்டாகும். ஆன்மாவானது ஈடேறும். நல்வினையினால் இவ்வளவு நன்மைகள் எல்லாம் இருக்கவும், தீவினை செய்யப் புகுதல் பைத்தியச் செயலல்லவா?


இந்த நல்வினை தீவினைகளைக் கன்மம் என்று சொல்லுவர். ஒருவன் முற்பிறவிகளிலே நற்கன்மம் செய்திருந்தால், இந்தப் பிறவியிலே அதற்குப் பலனாகிய இன்பத்தை அனுபவித்தற்கு மிகுந்த பொருள் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அவன் அந்தப் பொருளை மதுபானஞ் செய்தல், பிறருக்குத் தீங்கு செய்தல் போன்ற கருமங்களில் செலவு செய்கிறான். அல்லது வறியவர் களுக்குக் கொடுத்து நல்ல கருமங்களைச் செய்து செலவிடுகிறான். ஆகவே, முன்னே செய்த நற்கருமத்தின் பலனாகிய பொருளை அனுபவிக்கும்போது, மேலும் மேலும் நல்வினை

ஆகவே, பழைய வினையின் பயனை அனுபவிக்கும்போது புதிதாகவும் வினை செய்கிறான். அனுபவிக்கப்படுகின்ற வினைக்குப் **பிராரத்தம்** என்று பெயர். அனுபவிக்கும் போது செய்யப்படும் புதிய வினைக்கு **ஆகாமியம்** என்று பெயர். அனுபவிக்கப்படாமல் எஞ்சியிருக்கின்ற வினைக்குச் **சஞ்சிதம்** என்று பெயர். பிராரத்தம் எடுத்த இப்பிறவியிலே அனுபவிக்கப்படும் வினை (பிராப்தம் என்ற வடசொல் பிராரத்தம் எனத் திரிந்தது)


மேலே சொல்லப்பட்ட **பசுவினைகள் சிவவினைகள்** தவிர வேறொரு வகையான வினையும் உண்டு. அது ஆணவம் வலி கெட்ட காலத்தில் செய்யப்படும் வினை. ஒரு மாடு தாகத்தினால் தவிக்கும்போது ஒருவன் அதற்குத் தண்ணீர் கொடுக்கிறான். அவன் அந்தச் செய்கையை ‘‘நான் செய்கிறேன்’’ என்ற எண்ணத்தோடு செய்தால், அது மேலே சொல்லிய நல்வினையாகி, அவனுக்கு இன்பமாகிய பலனைக் கொடுக்கும். அதற்காக அவன் சில காலம் மறுமையிலே இன்பம் அனுபவிக்க நேரிடும். அவன் ‘‘நான் செய்கிறேன்’’ என்று எண்ணாமல் கடவுளுடைய திருவருள் செய்விக்கிறதென்று அந்தச் செய்கையைக் கடவுளுக்கு ஒப்புவித்துவிட்டால் இது நிலையற்ற உலக இன்பமாகிய பலனைத் தராமல் நிலையானதாகிய மோட்ச இன்பத்துக்கு அவனைத் தகுதி உள்ளவனாக்கும். இப்படியான வினை நல்வினைகளுக்குள்ளே மிகவும் மேலானது. இது பற்றில்லா வினை எனப்படும்.

. . . தொடரும்.

புதிய பல் மருத்துவமனை
குடும்ப பல் மருத்துவர்
**Dr. Vanathy Jeevakumar**
**டாக்டர் திருமதி வானதி ஜீவகுமார்**



29C Dundas Street East
Mississauga, Ont., L5A 1V9
(Hurontario/Dundas)




**சகல பல் மருத்துவ சேவைகள்**
(Including Braces Implants)
**வாரத்தில் ஏழு நாட்கள்**

Phone **(905) 281-0273**
Fax: (905) 281-8792



சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நினைவாலயம்,
பூங்கா திறப்புவிழா(07-01-2009)



மயிலைத் திருவள்ளுவர் கோயில் வெளிப்புறத் தோற்றம்